# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

CASE NO.MCOP.90/2018
Deposition of P.W.1- சோபா
Dated:11.08.2023.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

TN 75 X 9630 என்ற இருசக்கர வாகனத்தை விபத்தின் போது நான் நிதானமாகவும், கவனமாகவும் ஓட்டி சென்றேன். TN 74 C 9738 என்ற வாகனத்தை 1 வது எதிர்மனுதாரர் அதிகவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி மனு விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். மனு விபத்து சம்மந்தமாக காவல்துறையினர் 1 வதுஎதிர்மனுதாரர் மீது தான் முதல் தகவல்அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். தற்போது எனக்கும், எனது மகளுக்கும் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது. TN 74 C 9738 என்ற வாகனத்தின் ஓட்டுனரும், உரிமையாளரும் 1 வது எதிர்மனுதாரர் ஆவார். மேற்படி வாகனத்திற்கு மனு விபத்தின் போது காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்து வரவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு நான் தான் உரிமையாளர் ஆவேன். நான் இம்மனுவில் கண்ட அனைத்து எதிர்மனுதாரர்களிடமிருந்தும் இம்மனுவில் இழப்பீடுகோரியுள்ளேன். இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் நான் என்பதால் நான் 2 வது எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. 1 வதுஎதிர்மனுதாரரின் கவனக்குறைவால் மனுவிபத்து நடைபெற்றது என்பதால் 2 வது எதிர்மனுதாரரிடமிருந்து நான் இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரருக்கு மனு விபத்தின் போது ஓட்டுனர் உரிமம் கிடையாது. 1 வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி வாகனம் சாலையில் இயங்குவதற்கு தகுதி கிடையாது என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரர் இம்மனுவின் மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. - மனுவில் கூறியுள்ளது போன்று மனுதாரருக்கு செலவுகள் ஏற்படவில்லை என்றும் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றும் சொன்னால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட கூடியது என்றால்சரியல்ல.